**த. நா.ச.பே. எண் : 042** **நாள் : 05.07.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (5.7.2018) சட்டப்பேரவையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவை விதி 55–ன் கீழ் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி வேண்டி அளித்த பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து உரையாற்றினார்கள்.**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மின்சாரம், இடி மின்னல் தாக்கி உயிரிழந்தோர், வனவிலங்கு தாக்கி உயிரிழந்தோர், நீரில் மூழ்கி உயிரிழந்தோர் மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்தோர் ஆகியோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வேண்டி பல சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சி தலைவர் உட்பட பலபேர் நிவாரணம் கேட்டு விண்ணப்பித்து உள்ளார்கள். அதோடு, பேரவை துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களிடமிருந்தும் பரிந்துரைத்து உள்ள கோரிக்கைகளும் வரப்பெற்றுள்ளன. இக்கோரிக்கைகளை பரிசீலித்து, கீழ்க்கண்டவாறு நிவாரணம் அறிவிக்கின்றேன்.

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டத்தைச் சேர்ந்த திரு. செல்வராஜ் என்பவரின் மகன் திரு. பழனி என்பவர் 5.6.2018 அன்று கொத்தவால்சாவடி அருகில் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார்.

நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் வட்டம், ஜமீன் எளம்பிள்ளை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவர் 24.5.2018 அன்று மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், வேட்டைக்காரனிருப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. பக்கிரிசாமி என்பவரின் மகன் திரு. பிரகாஷ்ராஜ் என்பவர், 19.6.2018 அன்று, வீடு இடிந்து விழுந்ததில், இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், முகையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.ஜெயபால் என்பவரின் மகன் செல்வன் மணிகண்டன் என்பவர் 12.6.2018 அன்று எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், மகாதானம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சேப்பையன் என்பவரின் மகன் திரு. சண்முகம் என்பவர் கடுவையாறு பிரிவு வாய்க்காலில் விழுந்து, நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம், ஒரத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.ராஜபாண்டியன் என்பவரின் மகன் திரு. சதீஷ்குமார் என்பவர் நம்பியார் நகர் கடற்கரையில் குளிக்கும் போது, கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னுசாமி என்பவர் 15.6.2018 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஆலாடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பிரகாஷ் என்பவரின் மகள் சிறுமி பிரகதி என்பவர் 20.6.2018 அன்று வாகனம் மோதி சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், ஆனைமலைக்குன்றுகள் கிராமம், காஞ்சமலை எஸ்டேட்டைச் சேர்ந்த திரு. மதி என்பவரின் மனைவி திருமதி கைலாசவதி என்பவர் 15.6.2018 அன்று சிறுத்தைப் புலி தாக்கி உயிரிழந்தார்.

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பெருந்தலையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரமேஷ் என்பவரின் மனைவி திருமதி, ஆனந்தி என்பவர் பலத்த காற்று மற்றும் மழையின் காரணமாக தென்னை மரம் விழுந்து, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.5.2018 அன்று உயிரிழந்தார்.

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், தெக்கலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனிசாமி மற்றும் அவருடைய மனைவி திருமதி மல்லிகா ஆகிய இருவரும் 15.6.2018 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தனர்.

பல்லடம் வட்டத்தைச் சேர்ந்த திரு. தர்மராஜன் என்பவரின் மகன் திரு. ராஜேந்திரன் என்பவர் 20.5.2018 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார்.

உடுமலைப்பேட்டை வட்டம், பெரியகோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகபெருமாள் என்பவரின் மகள் சிறுமி லோக ஜனனி என்பவர் 17.6.2018 அன்று குட்டை நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

திருப்பூர் வடக்கு வட்டம், செட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.மூர்த்தி என்பவரின் மகன் சிறுவன் அசோக் மூர்த்தி என்பவர் 3.6.2018 அன்று குட்டை நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், புத்தளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவநாராயண பெருமாள் என்பவரின் மகன் திரு. சதாசிவம் என்பவர் 29.6.2018 அன்று வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார்.

தோவாளை வட்டம், தாழக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. உமையோரான்பிள்ளை என்பவரின் மனைவி திருமதி. சந்திரிகா என்பவர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து 28.6.2018 அன்று உயிரிழந்தார்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், சேப்ளாநத்தம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆண்டகுருநாதன் என்பவரின் மகன் திரு. ஆனந்தசெல்வன் என்பவர் 2.7.2018 அன்று வயலில் விளையாடிக் கொண்டிருந்த போது, மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 18 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு. பழனி, திரு. மாணிக்கம் மற்றும் செல்வன் மணிகண்டன் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்தும், வீடு இடிந்து விழுந்து உயிரிழந்த திரு. பிரகாஷ்ராஜ் மற்றும் திருமதி சந்திரிகா, நீரில் மூழ்கி உயிரிழந்த திரு. சண்முகம், திரு. சதிஷ்குமார், செல்வி லோக ஜனனி, திரு.அசோக் மூர்த்தி, சாலை விபத்தில் உயிரிழந்த திரு. பொன்னுசாமி, சிறுமி பிரகதி, திரு. பழனிசாமி மற்றும் அவருடயை மனைவி திருமதி மல்லிகா, திரு. ராஜேந்திரன், தென்னை மரம் விழுந்து உயிரிழந்த திருமதி ஆனந்தி, மற்றும் வெல்டிங் வேலையின் போது உயிரிழந்த திரு. சதாசிவம் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும்; சிறுத்தைப்புலி தாக்கி உயிரிழந்த திருமதி கைலாசவதி அவர்களின் குடும்பத்திற்கு நான்கு லட்சம் ரூபாய் வனத்துறை மூலமும்; மின்னல் தாக்கி உயிரிழந்த திரு. ஆனந்தசெல்வன் குடும்பத்திற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நான்கு லட்சம் ரூபாயும் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜே.ஜி.பிரின்ஸ், திரு.H.வசந்தகுமார், திரு.ஆர்.கணேஷ், திரு.வி.எஸ்.காளிமுத்து, திரு. ச. பாண்டி, திரு. எஸ். ராஜேஷ்குமார், திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், திரு. ஆர்.டி. அரசு ஆகியோர் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு, ஏற்கனவே என்னால் 14.6.2018 மற்றும் 23.6.2018 ஆகிய தேதிகளில் நிவாரணம் அறிவிக்கப்பட்டு பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சாலை விபத்து நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்து கொண்டு அமைகிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**